செ.வெ.எண்: 72 நாள்: 27.01.2017

**விராலிமலை சட்டமன்ற தொகுதியில் காவேரி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் பேரூராட்சியில் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சாலையின் இருபுறமும் கழிவு நீர் வடிகால் கட்டுமானப்பணிக்கான பூமிபூஜையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்த பூமிபூஜை விழாவினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

விராலிமலை சட்டமன்ற தொகுதியில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இலுப்பூர் பொதுமக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று நெடுஞ்சாலைத்துறை நிதியின் கீழ் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் சாலையின் இருபுறமும் கழிவுநீர் வடிகால் கட்டுமானப்பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பணி இலுப்பூர் பேருந்து நிலையத்திலிருந்து கடை வீதி வழியாக சாலையின் இருபுறமும் 900 மீ நீளத்தில் கட்டப்படவுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் கழிவுநீரினை இவ்வடிகால் வழியாக பாதுகாப்பாக வெளியேற்றுவதுடன் நகரின் சுகாதாரமும் பேணி பாதுகாக்கப்படும்.

மேலும் இலுப்பூரில் பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.72.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை கட்டிட கட்டுமானப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இக்கட்டிடம் 206 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதில் 2 படுக்கைகள், 2 கூட்டரங்க அறை, 1 கருத்தரங்க அறை, 1 சாப்பாட்டு அறை, கழிவறை வசதி, பாதுகாப்பு சுற்றுச்சுவர், ஆழ்துளை கிணறுடன் கூடிய குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் எழிலுற கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் முக்கிய விருந்தினர்கள் மற்றும் அரசு அலுவலர்களுடனான கூட்டங்கள் இதில் நடத்தலாம்.

இலுப்பூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம், அரசுப்பெண்கள் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலக கட்டிடம் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதே போன்று பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் ரூ.310 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் காவேரி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதுடன் விரைவில் இத்திட்டம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, செயற்பொறியாளர்கள் திரு.செந்தில் (நெடுஞ்சாலைத்துறை), திரு.செங்குட்டுவேல் (பொதுப்பணித்துறை), இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், முன்னாள் பேரூராட்சித்தலைவர் திரு.குருபாபு, அர்பன் கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.இரா.இராஜசேகரன், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**